**செய்தி வெளியீடு எண்: 691** **நாள்:14.10.2019**

# செய்தி வெளியீடு – 14.10.2019

இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் 01.01.2020 தேதியினை தகுதியாக கொண்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

2. இப்பணிகளை கண்காணிக்கும் பொருட்டு, இந்தியத் தேர்தல் ஆணையம் 10 மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை வாக்காளர் பட்டியல் பார்வையாளராக நியமனம் செய்துள்ளது. இவ்வாக்காளர் பட்டியல் பார்வையாளர்கள் சுருக்க முறை திருத்தப் பணிகளை அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட மாவட்டங்களுக்கு குறைந்தது மூன்று முறையாவது பயணம் மேற்கொண்டு மேற்பார்வையிடுவர். இவ்வலுவலர்கள் மாவட்டங்களிலுள்ள சில வாக்குச்சாவடிகளை மேற்பார்வையிட்டு, அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் கூட்டங்களை நடத்துவதோடு, பொதுமக்களைச் சந்தித்து வாக்காளர் பட்டியல் சார்ந்த புகார்கள் குறித்தும் ஆய்வு செய்வர். அவர்களின் ஆய்வுக்குப் பின்னர், தேர்தல் ஆணையத்திற்கு அறிக்கையை அனுப்புவர்.

3. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்பேரில் வாக்காளர் பட்டியல் பார்வையாளர்களுடன் கலந்தாய்வு கூட்டத்தினை தலைமைத் தேர்தல் அதிகாரி இன்று (14.10.2019) நடத்தினார்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி**
**தமிழ்நாடு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**